## 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## அ.வ.எண்.260/2017

2022 வது ஆண்டு ஜூலை மாதம் 27 ம் நாள் P.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.சிவசம்போ | வட்டம் : | சென்னை |
| த/பெ : | திரு.அய்யாகுட்டி | கிராமம் : | |
| வயது : | 82 | மதம் : | |

**27.07.2022 முதல் விசாரணை :** நான் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 17.05.1901 தேதியிட்ட தங்கம்மை பெயருக்குரிய கிரைய பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ 1 ஆகும். 02.09.1941 தேதியிட்ட என் தாயார் செண்பகம்மாள் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 2 ஆகும். 22.02.2015 தேதியிட்டு தபசில் சொத்தின் மீது 1 ம் பிரதிவாதி ஏற்படுத்திய மோசடி செட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 3 ஆகும். 05.1.2016 தேதியிட்டு தபசில் சொத்தின் மீது 1 ம் பிரதிவாதி ஏற்படுத்திய செட்டில்மெண்ட் மீதான ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகும். 05.12.2016 தேதியிட்ட தபசில் சொத்தின் 1 ம் பிரதிவாதி மீண்டும் 2 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய போலி செட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 5 ஆகும். 20.03.2017 தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தபசில் சொத்தின் மீது 3 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய மோசடி கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 6 ஆகும். 19.04.2017 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள தபசில் சொத்திற்கான டவுண் சர்வே ரிஜிஸ்டர் நகல் வா.சா.ஆ 7 ஆகும். 19.04.2017 தேதியிட்ட தபசில் சொத்தை மாநகராட்சி நில அளவை வரைபட நகல் வா.சா.ஆ 8 ஆகும். வில்லங்க சான்றிதழ்கள் வா.சா.ஆ 9 ஆகும். 10.03.2017 தேதியிட்ட வாதி தபசில் சொத்தின் மீதுள்ள வீட்டிற்கான

தந்தை பெயரிலான சொத்து வரி ரசீது வா.சா.ஆ 10 ஆகும். 10.11.1996 தேதியிட்டு வாதி தாயார் செண்பகம்மாள் தபசில் சொத்தில் இறந்ததற்கான மாநகராட்சி இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.11 ஆகும். 2001–2002 வருடத்திற்கான தீர்வை ரசீது மற்றும் தபசில் சொத்தில் வாதியின் தந்தை அய்யாகுட்டி 1958 ம் வருட இறப்புக்கான இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்துள்ளேன். புகைப்படம் மற்றும சிடி வா.சா.ஆ 12 ஆகும். 28.05.2017 தேதியிட்டு வாதி பிரதிவாதிகளை எச்சரித்து நாளிதழில் வெளியிட்ட எச்சரிக்கை அறிவிப்பு விளம்பரம் வா.சா.ஆ 13 ஆகும். 05.06.2017 தேதியிட்ட வாதி ஏஜெண்டை பிரதிவாதிகள் மிரட்டியது சம்பந்தமாக காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் வா.சா.ஆ 14 ஆகும். மாதிரி வரைபடம் வா.சா.ஆ.15 ஆகும். வா.சா.ஆ–1,2 அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 260/2017**

14.09.2022 – வா.சா.1 திரு.சிவசம்போ

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. லெட்சுமணன் என்பவருக்கு வெள்ளகண்ணு, சண்முகவேல், செல்லையா ஆகிய 3 மகன்கள் வாரிசுகள் என்றால் சரிதான். செல்லையாவிற்கு வாரிசுகள் கிடையாது என்றால் சரியல்ல. செல்லையாவிற்கு 1 மகன் உள்ளார். செல்லையாவின் மகனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் தெரியாது. வெள்ளகண்ணு என்பவருக்கு என் தந்தை அய்யாகுட்டி என்பவர் வாரிசு. எனது தாயார் பெயர் செண்பகம், எனது சகோதரர் பெயர் மகாதேவன், அவர் காலம் சென்றுவிட்டார் என்றால் சரிதான். மகாதேவனுக்கு மதனா என்ற மனைவியும், செல்வங்கர், மைதிலி, தாமரைசெல்வன், ஜெயமுருகானந் ஆகிய மக்களும் உள்ளனர்.

2. எனது பெற்றோர் இறந்த பிறகு அவர்கள் சொத்து குறித்து எனக்கும், எனது அண்ணன் மகாதேவனுக்கும் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏதும் நடந்ததா என்றால் பதிவு செய்யப்படவில்லை. வாய்மொழியாக பாகப்பிரிவினை நடந்தது. மேற்படி பாகப்பிரிவினை மகாதேவன் இறந்த பிறகு நடந்தது. வாய்மொழி பாகப்பிரிவினை எந்த மாதம், எந்த வருடம் நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் நினைவில்லை.

3. எனது தாயார் கிரையம் பெற்ற சொத்தின் தற்போதைய டி.எஸ்.எண்.94 மற்றும் 95 என்றால் சரிதான். 95 சர்வே எண் கீழ்பக்கமாகவும், 94 மேல்பக்கமாகவும் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை நான் டி.எஸ்.எண்.95 குறித்து மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். டி.எஸ்.எண் 95ஐ வாய்மொழி பாகப்பிரிவினையை அனுசரித்து மாநகராட்சி என் பெயரில் டவுண் சர்வே பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை.

4. வா.சா.ஆ.7ல் டி.எஸ்.எண்.95ன் டவுண் சர்வே ரிஜிஸ்டரில் எனது தாயார்

பெயரும், எனது பெயரும் உள்ளது என்றால் சரிதான். டி.எஸ்.94 க்கும் எனது தாயார் பெயரும், எனது பெயரும் உள்ளது என்றால் சரிதான்.

5. வாய்மொழி பாகப்பிரிவினையை அனுசரித்து எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கும், எனது அண்ணன் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கும் தனித்த வருவாய் ஆவணங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றால் நினைவில்லை. டி.எஸ்.எண்.95 எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. டி.எஸ்.எண்.95 ல் எனது அண்ணன் மக்களுக்கும் உரிமை உள்ளது என்றும், எனவே அவர்களை கட்சி சேர்க்காமல் தொடரப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.
6. தபசில் சொத்து கிழக்கு பக்கம் கனகசபாபதி வீடு என குறிப்பிட்டுள்ளேன். அவர் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். தபசில் சொத்து டி.எஸ்.எண்.95 ன் விஸ்தீரணம் 2.79 சென்டின் மதிப்பு வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் எவ்வளவு என்றால் ரூ.20,00,000/-. தபசில் சொத்து குறித்து எனக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் உரிமை பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. எனது தாயாரின் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது.
7. தபசில் சொத்தின் அனுபவம் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி வசம் வழக்கு தொடுக்கும் சமயத்தில் இருந்தது என்றால் இல்லை.
8. தாவா சொத்து தற்சமயம் வீடாக உள்ளது. அந்த வீட்டை கட்டியுள்ளது 4ம் பிரதிவாதி என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டை நான் கட்டவில்லை. வீடு எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் 4,5 வருடங்களாக உள்ளது. வீட்டின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் தெரியாது. தபசில் சொத்தில் உள்ள வீட்டை இடித்து அதன் சுவாதீனத்தை எனக்கு மீட்டளிக்குமாறு இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இவ்வழக்கு முடிந்த பிறகு அந்த பரிகாரம் தேடிக்கொள்வேன்.
9. சொத்து குறித்து உரிமை பிரச்சனைக்கும் எனக்கும் பிரதிவாதிக்கும்

உள்ளது என்றும், எனவே விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. லெட்சுமணன் என்பவரின் 2ம் மகன் சண்முகவேல் என்பவருக்கு சங்கரதாஸ், வேலம்மாள் என்ற 2 வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். சங்கரதாஸ்க்கு கிருஷ்ணவேனி, வசந்தகோகிலா, மனோன்மணி, சுப்புலெட்சுமி, 1ம் பிரதிவாதி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். வேலம்மாளுக்கு சுந்தரம்மாள், ராணி, அந்தோணி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சண்முகவேலின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காமல் தொடரப்பட்டுள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொத்து விபரங்கள் தமிழ் எழுத்துக்களில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கிழக்கு எல்கையாக பொது சுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது தாயார் பெயரிலுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிழக்கு, வடக்கு, மேற்கு எல்கையாக பொது சுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2ல் சொல்லப்பட்டுள்ள எல்கைகளுக்கு மாறாக பிராது தபசில் சொத்துக்களை விபரத்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3,4,5 ஆகியவை 1,2 பிரதிவாதிகள் சம்பந்தபட்ட ஆவணங்கள் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.10 சொத்து வரி ரசீது எனது தந்தை பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 படி 2009 முதல் 2017 ஆண்டு வரைக்கான சொத்து வரியை ஒரே நாளில் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். கதவு எண்.10 கணேசபுரம் என்பது தாவா சொத்தா என்றால் சரிதான். வழக்கு தொடர்வதற்கு முன்பு 1,2 பிரதிவாதிகள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். வா.சா.ஆ.15ல் அளவுகள் குறிப்பிடாததால் அது ஏற்கதக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

12. 4ம் பிரதிவாதி தபசில் சொத்து குறித்து உரிமை மூலம் விசாரணை செய்து அதன்படி சொத்தில் வில்லங்கம் இல்லை என்று தெரிந்த பிறகே ஒரு நல்ல எண்ண கிரையதாரராக தபசில் சொத்தில் கிரையம் பெற்றுள்ளார்

என்றால் சரியல்ல.

13. வழக்கை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு பணஆள்வரை அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனவே பிராது பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி பொறுத்து வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.260 /2017**

17.11.2022 – வா.சா.1 திரு.சிவசம்போ

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாயார் பெயரில் உள்ள சொத்தை மீட்டு கொடுக்க கோரி தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தாவா சொத்து தங்களுடையது என கட்சி செய்கிறார்கள், நான் அது எனது சொத்து என கட்சி செய்கிறேன் என்பதால் தபசில் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என தீர்மானிக்க வேண்டும் என்றால் சரிதான்.
2. நீதிமன்றத்தில் தபசில் சொத்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் வீட கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் வழக்கு சொத்து பிரதிவாதிகளிடமிருந்து அனுபவ மீட்டெடுப்பு பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல.
3. வழக்கு சொத்தின் பழைய டி.எஸ்.எண் என்ன என்றால் நினைவில்லை, ஆவணத்தை பார்த்தால் தெரியும். தற்போதைய டி.எஸ்.எண்.95. பிரதிவாதி என்ன கட்சி செய்து வருகிறார் என்று படித்து பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன்.
4. 1888 ஆம் ஆண்டு தபசில் சொத்து குறித்து நடந்த பரிவர்த்தனைகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தை நாராயணசாம்பான் என்பவருக்கு பாத்தியப்பட்டு, அதை லெட்சுமண சாம்பான் என்பவருக்கு 30.05.1888 ம் ஆண்டு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.
5. இவ்வழக்கு சமயத்திலாவது 1888 ஆம் ஆண்டு தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை எடுத்து பார்ததேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். அந்த வில்லங்க சான்றிதழில் நாராயணசாம்பான் லெட்சுமண சாம்பானுக்கு கிரையம் கொடுத்த விபரம் தெரியும் என்றால் சரியல்ல.

6. அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அந்த வில்லங்க சான்றிதழ் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல. அறிவிப்பு கொடுத்தால் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யலாமா என்றால் இவ்வழக்கிற்கு சம்பந்தம் அற்றது.
7. எதிர்வழக்குரையில், 30.05.1888 ஆம் தேதியிட்ட ஆவணம் குறித்து பிரதிவாதிகள் கூறிய பின்பும் அதன் நகல் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. லெட்சுமண சாம்பானுக்கு வெள்ளகண்ணு, சண்முகம், செல்லையா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். லெட்சுமண சாம்பான் காலத்திற்கு பிறகு அவர் வாரிசுகள் சொத்து குறித்து என்ன ஏற்பாடு செய்து கொண்டனர் என்று தெரியாது என்றால் சரிதான்.
8. சொத்து சண்முகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. சண்முகத்திற்கு சங்கரதாஸ், வேலம்மாள் என்ற 2 வாரிசுகள் என்றால் சரிதான். சங்கரதாஸ் 1ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. சங்கரதாஸ் காலமாகிவிட்டார் என்றால் சரிதான்.
9. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு மேற்படி உயிலின் அடிப்படையில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி 3,4 பிரதிவாதிகளுக்கு ஒரு கிரைய ஆவணம் ஒன்றை வழக்கு சொத்தை பொறுத்து ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் தெரியாது.
10. 3ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் 2 வீடுகள் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதில் ஒரு வீட்டை 4ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதி 31.07.2017 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வீட்டிற்கு மேல்பக்கம் உள்ள நிலம் தான் தாவா நிலம் என்றால்

சரிதான்.

11. 1941ம் ஆண்டு ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். லெட்சுமணன் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் லெட்சுமணன் வீட்டு மனை சுவருக்கு மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறானது.

12. 1941 ஆண்டு ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில், லெட்சுமணன் மனை வீடு பொது சுவருக்கு மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1888ம் ஆண்டு ஆவணத்தில் வழக்கு சொத்து கிழமேல் தென்வடல் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அந்த ஆவணம் சம்பந்தமற்றது.

(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடரச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 260/2017**

15.12.2022 – வா.சா.1 திரு.சிவசம்போ

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 18.08.1888 தேதியிட்ட ஆவணம் குறித்து படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்வழக்குரையில் அந்த ஆவணத்தை பற்றி குறிப்பிடப்பட்டிருந்தும் நாளது தேதிவரை அதுகுறித்து நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் உள்ள சொத்தும், வழக்கு சொத்துக்களும் ஒன்று என்றால் சரியல்ல. 1941ம் ஆண்டு ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் தான் என்னுடையது.
2. 1888 ஆவணத்தில் கிழமேல் தச்சுமுளம் 7.1/8 மற்றும் தென்வடல் தச்சுமுளம் 18.1/2 அளவுள்ள இடத்தை தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்றால் அடி கணக்கு தான் எனக்கு தெரியும். தச்சுமுளம் எனக்கு தெரியாது. மேற்சொன்ன அளவுகளுக்குள் தான் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அது அவருடையது. என்னுடையது அல்ல.
3. 1941ஆம் ஆண்டு ஆவணத்தில் தபசில் சொத்தின் அளவு கிழமேல் தச்சுமுளம் 13, தென்வடல் தச்சுமுளம் 21 என்றால் சரிதான். லெட்சுமணன் மனை வீட்டிற்கு மேற்கு தான் மேற்சொன்ன இடம் என்றால் சரிதான். அந்த லெட்சுமணன் தான் 1888ம் ஆண்டு ஆவணத்தில் கண்டுள்ள லெட்சுமணன் என்றால் அதுகுறித்து தெரியாது.
4. லெட்சுமணசாம்பான் வாரிசுகள் யாரையும் இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட லெட்சுமண சாம்பானின் வாரிசுகள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர் என்றும், அவர்களை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.
5. 1888ஆம் ஆண்டு கிரைய ஆவணத்தில் கண்ட கிழமேல் தச்சுமுளம் 7.1/8 மற்றும் தென்வடல் தச்சுமுளம் 18.1/2 அளவுள்ள இடத்தை

அனுபவித்ததாக என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் அந்த சொத்து எனக்கு சம்பந்தம் அற்றது. அது எனது சொத்து அல்ல.

6. பிரதிவாதிகள் 1888ம் ஆண்டு கிரைய ஆவணத்தில் உள்ள சொத்தில் தான் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது எனது சொத்து அல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வீடு கட்டியிருக்கும் இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

7. எனது வயோதிகம் காரணமாகவும், இடத்தை அடையாளம் காணுவதில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவும், பிரதிவாதிகள் மேல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1888ம் ஆண்டு முதல் லெட்சுமணசாம்பானை தொடர்ந்து அவரது வாரிசுகள் அனுபவம் செய்து, தற்போது பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனவே வழக்கில் கோரியுள்ள பரிகாரம் காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது தபசிலில் பிரதிவாதிகள் என்ன ஆக்கி்ரமிப்பு செய்துள்ளனர் என குறிப்பிட்டு கூறாததால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

8. வழக்கு சொத்து எத்தனை சென்ட் என்றால் 7.05 சென்ட். தற்போது சாட்சி 2.30 சென்ட் என கூறுகிறார். எனக்கு பிராது தபசில் சொத்தின் விஸ்தீரணம் தெரியாது என்றும், தவறான விபரங்களை கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து திருநெல்வேலி மையபகுதியில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 1 சென்டின் சந்தை மதிப்பு சுமார் 10 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மதிப்பு 30 லட்சத்திற்கு மேல் உள்ளதால் இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரணை செய்ய பணஆள்வரை அதிகாரம் கிடையாது என்றால் தாவா சொத்தின் மதிப்பு 20 லட்சம் தான். வழக்கு சொத்தின் மதிப்பை குறைத்து தவறான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

9. 05.06.2017 ல் நான் சென்னையில் தான் இருந்தேன் என்றால் சரிதான். எனவே 05.06.2017 அன்று என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் வீட்டை பிரதிவாதிகள் இடித்தனர். அது குறித்து புகார் கொடுத்த ரசீது ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. நான் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றும், மோசடியாக பிராது தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. பிரதிவாதி என் இடத்தில் வீடு கட்டியுள்ளார். பிரதிவாதி வீடு கட்டியுள்ள பகுதிக்கும் என் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், நான் பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 260/2017**

2023வது ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாள் P.W.2 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.முகம்மது பாரூக் | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.சதக் | கிராமம் : | |
| வயது : | 47 | மதம் : | |

**31.01.2023 முதல் விசாரணை:** நான் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 260/2017**

07.2.2023– வா.சா.2 திரு.முகம்மது பாரூக்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. வாதியை எனக்கு எப்போதிருந்து தெரியும் என்றால் 2009 ஆம் ஆண்டிலிருந்து. எது குறித்து நான் வாதியிடமிருந்து பொது அதிகார பத்திரம் பெற்றுள்ளேன் என்றால் சொத்து சச்சரவு குறித்து பொது அதிகார பத்திரம் பெற்றுள்ளேன். தாவா சொத்து டி.எஸ்.எண்.95 ல் உள்ளது என்றால் சரிதான்.
2. தாவா சொத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் 4 ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் வாடகைக்கு விட்டுள்ளார். எனக்கு தெரிய தாவா வீட்டில் எத்தனை ஆண்டுகளாக 4 ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் 2017 ல் வீடு கட்டி, அது முதல் அனுபவித்து வருகிறார்.
3. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்தின் அனுபவம் 4 ம் பிரதிவாதி வசம் தான் இருந்தது என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதிக்கு முன்பு தாவா சொத்தின் அனுபவம் 3 ம் பிரதிவாதி வசம் இருந்தது என்றால் சரியல்ல. செண்பகம் அம்மாவின் வீடு. கனகசபாபதி மற்றும் தேவகி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது.
4. வழக்கு தாக்கல் செய்யும் போது, நான் வழக்கறிஞருக்கு தகவல் கூறினேனா என்றால் வாதி சிவசம்போ உடல்நலம் சரியில்லாமல் சென்னையில் இருந்ததால் நான் பொது அதிகாரம் பெற்று வழக்கறிஞருக்கு தகவல் சொன்னேன். பிராதை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.
5. 4 ம் பிரதிவாதி வசம் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தை சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். 4 ம் பிரதிவாதி வீட்டின்

அடிமனை மதிப்பு சுமார் 20 லட்சம். 20 முதல் 30 லட்சம். வீடு எத்தனை சென்டில் கட்டப்பட்டுள்ளது என்றால் 2.1/2 செண்ட் நிலத்தில் பாதியில் வீடு கட்டப்பட்டுள்ளது. அந்த வீடு காங்கீரிட்டால் ஆன வீடு என்றால் சரிதான்.

6. தாவா சொத்து சம்பந்தப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் உள்ள எல்கை மால்களின் படி தற்போது ஸ்தலத்தில் உள்ளதா என்றால் இல்லை. 02.09.1941 தேதியிட்ட ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் உள்ள எல்கை மால்களின் படி தற்போது ஸ்தலத்தில் உள்ளதா என்றால் இல்லை. 02.09.1941 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் தற்போது சர்வே எண்.94 மற்றும் 95 ல் உள்ளது என்றால் சரிதான்.

7. டி.எஸ்.எண்.95 கீழ்பக்கமாகவும், டி.எஸ்.எண்.94 மேல்பக்கமாகவும் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு டி.எஸ்.எண்.95 ஐ பொறுத்து மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டி.எஸ்.எண்.94 குறித்து இல்லை என்றால் சரிதான். செண்பகத்தம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 ஆண் வாரிசுகள். ஒருவர் வாதி மற்றும் மற்றொருவர் மகாதேவன் என்றால் சரிதான். வாதிக்கும், மகாதேவனுக்கும் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏதும் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை.

8. டி.எஸ்.எண்.94 மற்றம் 95 க்கு மாநகராட்சி பட்டாவில் சிவசம்போ மற்றும் அவரது சகோதரர் வாரிசுகள் பெயரில் உள்ளது என்றால் சிவசம்போ பெயரில் உள்ளது. டி.எஸ்.எண்.95 ஐ வாதி அனுபவம் செய்து வந்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் உள்ளது. வாதி சென்னையில் சுமார் 30 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார். வாதியின் தாயார் காலம் ஆகி எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் 1995 ல் காலம் சென்றார். வாதியின் சகோதரர் மகாதேவன் 1975 ல் காலம் சென்றார். தாவா சொத்தின் அனுபவம் வாதியின் வசம் இருந்து எப்போது

சென்றது என்றால் 2013 வரை தாவா வீட்டின் வாடகையை வாதி பெற்று வந்தார்.

9. தாவா சொத்து சம்பந்தமாக வாதிக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கு எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் 2017ம் ஆண்டு 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து, 3ம் பிரதிவாதி கட்டுமானம் செய்த போது ஏற்பட்டது. வழக்கு தொடர்வதற்கு முன்பு வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். தாவா தொடர்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பினாரா என்றால் இல்லை. தாவா சொத்து வாதிக்கோ, அவரது தாயாருக்கோ எந்த காலத்திலும் பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல.

10. வாதியோ அவரது தாயாரோ தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் வாதியின் தாய் 1995ம் ஆண்டு தாவா சொத்தில் வைத்து தான் இறந்தார். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவர் தான் அனுபவம் செய்து வந்தார் என்றும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்து அதை 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்து, 3ம் பிரதிவாதியிடமிருந்து 4ம் பிரதிவாதி கிரையம் பெற்று, 4ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி வழக்கை சரியான முறையில் தாக்கல் செய்யாத காரணத்தினால் தாவா பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.